**சுருக்கம்**

தொழில் நுட்பக் கல்வித் துறை-அரசு வணிகவியல் தேர்வுகள் "விடைத்தாள்களை மைய மதிப்பீட்டு முறை"யில் திருத்தம் செய்யும் நடைமுறையை அமுல்படுத்தல்-பிப்ரவரி 2001 தேர்வுகள் முதல்-அரசாணை வழங்கப்படுகிறது.

---

**உயர் கல்வி (பி1) துறை**

அரசாணை (நிலை) எண்.138
நாள் : 30.3.2001

படிக்கப்பட்டவை :-

தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் கடித எண்.74144/க்யூ.1/2000, நாள் 20.12.2000, 20.2.2001 மற்றும் 27.2.2001.

------

ஆணை :-

தொழில் நுட்ப பட்டயத் தேர்வுகளில் மைய மதிப்பீடு (Central Valuation) மூலம் விடைத்தாள்களைத் திருத்தி தேர்வு முடிவுகள் வெளியிடப்படுகின்றன. அதே போன்று "மைய மதிப்பீட்டு" (Central Valuation) முறையில் விடைத்தாள்களை திருத்தும் நடைமுறையை அரசு வணிகவியல் தேர்வுகளுக்கும் அமுல்படுத்த தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் கருத்துரு அனுப்பியுள்ளார். புதிய முறையில் தேர்வு முடிவுகளை விரைவில் வெளியிடுவதுடன், அரசுக்கும் வணிகவியல் தேர்வுகள் வகையில் தற்பொழுது ஆண்டுக்கு ரூ.20,42,180/- அளவில் ஆகும் செலவில் ரூ.4,59,030/- மிச்சம் ஏற்பட்டு செலவு இவ்வாண்டு ரூ.15,83,150/- அளவில் நிற்கும் என்றும் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு பரிசீலித்து, அதனை ஏற்றுக் கொள்ள முடிவு செய்துள்ளது. அதற்கிணங்க, கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது :-

அ) வணிகவியல் தேர்வு விடைத்தாள்களை மைய மதிப்பீட்டின்படி பிப்ரவரி 2001 முதல் நடத்தவும், தேர்வு முடிவுகள் வெளியிடவும் அனுமதி வழங்குகிறது.

ஆ) ஏற்கனவே இதற்கென செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டில், இப்பணிக்கென ஈடுபடுத்தப்படும் பணியாளர்களுக்கு அரசாணை (நிலை) எண்.80, உயர்கல்வி, நாள் 12.3.99-ல் அனுமதி அளித்துள்ளபடி கைமாறு வழங்கவும், தினப்படி வழங்கவும், சில்லறைச்

செலவினங்களை மேற்கொள்ளவும் மதிப்பூதியத்தினை மையத்திலேயே பட்டுவாடா செய்யவும், ஒவ்வொரு முறையும் வணிகவியல் தேர்வுகளை எழுதும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப செலவுத் தொகையை நிர்ணயிக்கவும், நடப்புத் தேர்வில் ரூ.15,83,150/-க்கு மிகாமல் செலவிடவும் தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

இ) இப்பணியில் ஈடுபடுத்தப்படும் அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதரப் பணியாளர்கள் அனைவருக்கும் அவர்கள் பணியில் ஈடுபடுத்தப்படும் காலத்தை மாற்றுப் பணிக்காலமாக (Other Duty) கருத அனுமதி வழங்கப்படுகிறது.

3. புதிய நடைமுறையினால் ஏற்படும் செலவினை

“2203. தொழில் நுட்பக் கல்வி-108. தேர்வுகள்-I. திட்டத்தில் சேராதது AA. தேர்வுகள் நடத்துதல் :

-04. பயணச் செலவுகள் (2203 00 108 AA 0414)
-05. அலுவலகச் செலவுகள்-(2) ஏனைய சில்லறைச் செலவுகள்

(2203 00 108 AA 0521)

-33. தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல்.
(2) ஊதியம் (2203 00 108 AA 3322)

என்ற தலைப்பின் கீழ் ஏற்கெனவே உள்ள ஒதுக்கீட்டிற்குள் செலவினத்தை அடக்கிக் கொண்டு, மைய மதிப்பீட்டு முறையில் ஆகும் செலவினங்களுக்காக முன் பணத்தொகை பெற்றிடவும் அரசு அனுமதி அளிக்கிறது.

4. இவ்வாணை நிதித் துறையின் 5.3.2001 நாளிட்ட அ.சா. எண்.17637/கல்வி 1/ 2001-1இன் இசைவுடன் வெளியாகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஐ.வி. மணிவண்ணன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.
கருவூலத் துறை இயக்குநர், சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.

நகல்

நிதித்துறை, சென்னை-9.
உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.